# பிரேம வாஹினி

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி பாபா

8. Consecrate every act as worship of the Lord

## செய்யப்படும் செயல் எதுவாயினும் அதை இறை வழிபாடாகக் கருது

மழை விழும்போது நீரால் விண்ணும் மண்ணும் இணைகின்றன. உள்ளபடியே அது உள்ளக்கிளர்ச்சியூட்டும் அழகான காட்சி; படைப்புடன் நீங்கள் பின்னிப்பிணைந்து ஒன்றுவதற்கு படைப்பின் மூலமே போதிக்கப்படும் காட்சி அது. நாம் கற்றுக்கொள்ளவேண்டிய 3 பாடங்கள் உள்ளன, 1) படைக்கப்பட்டவை நிலையற்றவை, 2) அடிமையாக இருப்பவன் மனிதன், 3) தலைவனாக இருப்பவர் இறைவன். படைப்பு முழுவதும் ஓர் இறை வழிபாடு, வழிபடுபவன் மனிதன்; அதை ஏற்றுக் கொள்பவர் இறைவன்; வாழ்க்கை எனும் விளையாட்டு இப்படித்தான் ஆடப்படுகிறது.

இறைவனுக்குப் பணி செய்ய புதுப்புதுப் பொருட்களை மனிதனைச் சுற்றிக் குவிப்பது குறித்தும், பல வடிவங்களை வழிபட வாய்ப்பு அருளியது குறித்தும் அவன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த மனப்பான்மை எல்லையிலா இன்பம் நல்கும். உண்மையான ஆனந்தம் என்பது இன்பம் கலந்த வாழ்வை நடத்துவதுதான்.

சூரியன் உதித்தது முதல் மறையும்வரை செய்யப்படும் செயல் எதுவாக இருப்பினும் அதை இறைவழிபாடாகக் கருதி புனிதமாகச் செய்யவேண்டும். புத்தம்புது மலர்களைப் பறித்து அவற்றை வாடாமலும் தூய்மையாகவும் வைப்பதைப் போல செயல்கள் மாசுபடாமல் தூய்மையாக இருக்க இடைவிடா முயற்சி தேவை.

மனக்கண்ணில் இக்காட்சியை நிறுத்தி ஒவ்வொரு நாளும் செயல்பட்டு அதற்கேற்ப வாழ்வோமாகில் அது இடைவிடா இறைதொண்டாக மாறிவிடும். நான், நீ எனும் உணர்வுகள் மறைந்துவிடும்; நான் என்பது அதன் சுவடே இல்லாமல் அழிந்து விடும். அதன்பின் வாழ்வு தானாகவே “ நான் சேவகன் “ எனும் நிலையில் நிலைத்துவிடும். இவ்வுலகு நைவேத்யம் ஆகும். இறைவன் வழிபடப்படும் தலைவன் ஆவார்”. சொல், செயல், சிந்தனை மூன்றிலும் ஒருவர் இந்நிலையை அடையும்போது நீ, நான் எனும் வேறுபாடுகள் அனைத்தும் மறைந்துவிடும்.

**9 Fill every deed with service, devotion, wisdom**

## பக்தி ஞானத்தின் அடையாளங்கள்:

பக்திக்கும் ஞானத்துக்கும் வேறுபாடு இல்லை. சகுணம் நிர்குணமாவதைப்போல் பக்தி ஞானமாகிறது. கர்மம், பக்தி, ஞானம் தனித்தனியானவை என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. அவற்றை முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று வகைப்படுத்துவதைக்கூட நான் விரும்புவதில்லை. இம்மூன்றும் ஒன்றாகக் கலந்தது அல்லது மூன்றும் இணைந்தது என்பதையும் நான் ஒத்துக் கொள்வதில்லை. கர்மமே பக்தி, பக்தியே

ஞானம். ஒரு மைசூர்பாக் கட்டியில் உள்ள இனிப்பையும், எடையையும் வடிவத்தையும் தனித்தனியாகப் பிரிக்க முடியாது. ஒரு பகுதியில் இனிப்பையும், இன்னொன்றில் எடையையும், மற்றொன்றில் வடிவத்தையும் நாம் காணமுடியாது. நாக்கில் வைத்தவுடன் அதன் சுவை உணரப்படுகிறது. எடை குறைகிறது. அதைப்போலவே ஜீவனும் ஆத்மாவும், பரமாத்மாவும் பிரிக்க முடியாதவை; அவை அனைத்தும் ஒன்றே தான். அதே தான்.

எனவே ஒவ்வொரு தனி மனிதனின் செயலும் சேவை, ப்ரேமை, ஞான உணர்வுகள் முதலியவை நிரம்பி வழிபவையாக இருக்க வேண்டும். அதை வேறுவிதமாகச் சொல்வதானால் வாழ்க்கைச் செயல்களின் ஒவ்வொரு பகுதியும் கர்மம், பக்தி, ஞானம் நிரம்பியதாக இருக்க வேண்டும் எனலாம். புருஷோத்தம யோகம் என்பது இதுதான். அது வெறும் சொல்லளவில் நிற்காமல் நடைமுறையில் செயல்பட வேண்டும். அதாவது சாதனை இதயபூர்வமாக பக்தி ஞானத்துடன் இடைவிடாமல் செய்யப்பட வேண்டும். அமுதத்தின் இனிமை அல்லது இறைவனின் நாமமே வாழ்வின் மலர்ச்சியாகும்; புறத்தில் கிட்டும் வெளி இன்பத்தைவிட, இறை நாமத்தால் அகத்தில் எழும் இன்பமே சிறந்தது.

10. I and you, we, should become He

**நான், நீ, நாம் என்பது அவனாக வேண்டும்**

ஒரு செயல் இறையர்ப்பணமாகச் செய்யப்படும்போது அதிலுள்ள நன்மை, அதி நன்மை, அதீதமான நன்மை மூன்றும் (ஸ்வார்த்தா, பரார்த்தா, பரமார்த்தா) ஒன்றாகிவிடுகிறது. முதலில் நீ, நான் என்பது நாம் ஆகிவிடுகிறது. அதன்பின் நாம் என்பது அவன் (இறைவன்) ஆகிறது. ஆத்மா, பரமாத்மாவின் ஒரு பகுதியாகி இறுதியில் பரமாத்மாவாகவே ஆகிவிடுகிறது. 'ஓம் தத் சத்' எனும் மந்திரத்தின் உண்மையான பொருள் இதுதான்.

நேற்றாக இருந்தது, இன்றாக இருப்பது, நாளையாக இருக்கப்போவது ஓம் தத் சத். அங்கே அவன் என்பதும் 'நான்' என்பதும் எப்போதும் இருக்கிறது. சாதனையும் எப்போதும் இருக்கும். சூரியனும் அதன் கதிர்களும் ஒருபோதும் பிரியாதிருப்பதைப் போல எந்த சந்தர்ப்பத்திலும் சாதகர் சாதனை செய்யாமல் இருக்கக்கூடாது. சாதகர் ஒருவர் இடைவெளி விடாமல் சாதனை செய்யும் போது தான் அவர் ஓம் உடன் ஒன்றாக இருப்பதாகக் கூறமுடியும்.

11. shed attachment to worldly pleasure, develop attachment to God

**வாழ்க்கைக் கடமைகள்**

**உலக இன்பத்துக்கான பற்றை விடுத்து இறைவனுடனான பற்றை வளர்த்துகொள்.**

தனது கடமையைச் செய்வதன் மூலமும் நீதியுடன் வாழ்வதன் மூலமும் இதயமாசு துடைக்கப்பட வேண்டும். களைப்பும் பலவீனமும் மிக்க ஒரு காலம் வரலாம். அப்போது பின்வருமாறு பிரார்த்திக்க வேண்டும்; இறைவா! எல்லாம்

என் சக்திக்கு அப்பாற்பட்டன ஆகிவிட்டன. முயற்சி செய்ய முடியாத அளவிற்கு நான் பலவீனன் ஆகிவிட்டேன்; எனவே இறைவா! எனக்கு பலம் அருளுங்கள்.

முதலில் மனிதனின் முயற்சிகளை இறைவன் தூரத்திலிருந்து கவனிக்கிறார்; எதைப்போல? வினாக்களுக்குரிய விடைகளை மாணவர்கள் எழுதும்போது எட்ட நிற்கும் ஆசிரியரைப் போல். அதன்பின் மனிதன் போகத்திற்குரிய பற்றுகளை உதறிவிட்டு சேவையிலும், நற்கருமங்கள் ஆற்றுவதிலும் ஈடுபடும்போது ஊக்கமளிக்கும் வகையில் இறைவன் அருகே வருகிறார். ஒளியைப் பாய்ச்ச, மூடியிருக்கும் கதவு எப்போது திறக்கும் எனக் காத்திருக்கும் கதிரவனைப்போலவும், தனது எல்லையையும் எஜமானின் உரிமைகளையும் அறிந்துள்ள வேலைக்காரனைப் போலவும் இறைவன் இருக்கிறார். தனது வருகையை அறிவிப்பவர் அல்லது கதவைத் தட்டுபவர் அல்ல இறைவன். அவர் வெறுமனே காத்துக்கொண்டிருக்கிறார். வீட்டுக்காரர் கதவை லேசாகத் திறந்தவுடன் சூரிய ஒளி அடுத்த நொடியே பாய்கிறது. உள்ளே உள்ள இருளை ஓட்டுகிறது. இறவனின் உதவியை நாடும்போது, அவர் கைகளை நீட்டிய வண்ணம் மனிதனின் பக்கத்திலேயே தயாராக இருக்கிறார். எனவே மனிதனுக்கு எது தேவையெனில் வழிபடுவதற்குரிய விவேகமும் அவரை அறிந்து கொள்வதற்குரிய ஞானமுமே தேவை

12. Good character, virtue is wisdom.

**சத்குணமே ஞானம்:**

புரிந்து கொள்வது ஞானம் எனப்படும். ஆனால் அது வெறும் விவேகம் அல்ல. உண்ணல் என்பதற்கு உணவை நாவின்மீது வைத்தல் என்பது பொருள் அல்ல. உணவு மெல்லப்பட்டு, விழுங்கப்பட்டு, செரிக்கப்பட்டு, குருதியில் கலந்து, எலும்பு சதைக்குள் சென்று ஆற்றலும், வலிமையும் அளித்தால்தான் உண்ணல் என்பது பொருள் படைத்ததாக இருக்கும். அதைப்பொலவே புரிந்து கொள்ளல் அல்லது ஞானம் என்பது வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் ஊடுருவி எழுச்சியூட்ட வேண்டும். அது பொறிகள், புலன்கள், கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் மூலம் வெளிப்பட வேண்டும். மனிதன் இந்த உயர்ந்த நிலையை அடையவேண்டும்.

ஏராளமாகக் கற்பது ஞானமாகாது. சத்குணமே ஞானம். சேவை செய்ய சிறிது போகத்தைத் துறக்க வேண்டிவரும். அப்படிப்பட்ட போகம் யக்ஞத்தின் ஒரு பகுதியாகும். இந்த உடலாகிய யந்திரம் வேலை செய்ய அன்னம் எனும் எரிபொருள் தேவை. அன்னமே யக்ஞம் ஆகிவிடாது. ஆனால் அது இருந்தால்தான் யக்ஞம் நடக்கும். எனவே சிரிப்புக்கு ஆளாவது உண்பது அல்ல, பெருந்தீனி தின்பதே; உண்பது ரத்த போஷாக்குக்காகத்தான். உண்பது வழிபாட்டின் ஒரு பகுதியாகும்.

வெறுமனே பூவைப் பறித்து அதைச் சிலையின் தலைமீது வைத்துவிடுவது பூஜை ஆகாது; அந்த மலரை வளர்ப்பதற்காக உழைத்த தோட்டக்காரனும்

வழிபாட்டுக் குரியவனே. உணவு அளிப்பது உடல் செயல்படத்தான். தியாகத்துக்கு உதவக்கூடியவையும் யக்ஞுமாகிறது.

1) உலகை இறைவழிபாட்டுக்குப் பயன்படுத்துவது. 2) சமுதாயத்தில் சாந்தியும் நீதியும் நிலவச் செய்வது, 3) உடலின் செயல்களைக் கட்டுப்படுத்தி ஒருங்கிணைப்பது ஆகிய இந்த மூன்று கோட்பாடுகளுக்காகச் செய்யப்படும் செயல் அனைத்தும் தியாகமாகிறது. முதலாவது யக்ஞம், இரண்டாவது தானம், மூன்றாவது தவம் எனப்படும். மனிதனின் செயல்பாடுகள் அனைத்தும் இந்த மூன்று தேவைகளை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும்.

13. Reach God by the path of truth and discrimination

**சத்தியமே தெய்வம்:**

இந்த நிலையை அடைய அஸ்திவாரமாக அமைவது ஒழுக்கமான வாழ்க்கை. பொய்யையும், மெய்யையும் பிரித்தறியும் விவேகத்தை அடிப்படையாகக் கொண்டது ஒழுக்கமான வாழ்க்கை. முத்தை வைத்துக் கொண்டு சிப்பியை எறிந்து விடுவது போல சாரமான சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, சாரமற்ற சக்கைகளை ஒதுக்கிவிட வேண்டும். அதன்பின்னும் தனி நபர் முயற்சி, தெய்வ அருள் இரண்டும் இருக்க வேண்டும். உடலும், ஆத்மாவும் தனித்தனியானவை எனும் பெரிய போதனையை இடைவிடாமல் செயல்படுத்த வேண்டும். இது மிகவும் நன்மை நல்கும் பயிற்சி. ஒற்றுமையான சமுதாய வாழ்க்கைக்கும் ஆன்மீக வாழ்க்கையின் அனைத்து அம்சங்களுக்கும் இப்படிப்பட்ட விவேகம் இன்றியமையாதது. சத்தியத்தை ஆக்கல், அழித்தல், காத்தல் மூன்றிலும் உள்ள சத்தியத்தை இறைவனே சத்தியமாக இருப்பதை உணர்வது தவிர்க்க முடியாதது.

பரமாத்ம சேவைக்குரிய உணவுத் தூயதாக இருக்கிறதா என கவனிக்க வேண்டும். எவ்வளவு உணவு? என்பதைவிட எப்படிப்பட்ட உணவு? என்றே வினவ வேண்டும். அதற்காக அளவை அசட்டை செய்துவிட முடியாது என்பது உண்மைதான். ஆனால் அதை உண்பது எதற்காக? என்பதே வினா. சேவைக்குரிய பலம் பெற அது தேவைப்படுகிறது. சேவாயக்ஞம் நல்ல விளைவு நல்க உணவு தேவைதான். ஆனால் அந்த உணவு தூயதாக இருக்க வேண்டும்; உணவின் இந்த அம்சத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இப்படியாக ஒவ்வொருவரும் அவரவர் பழக்கங்கள் மீதும் நடத்தை இயல்புகள் மீதும் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும். அதன்பின் உடல்பற்று அற்று விடும்; ஆத்மானந்தம் அடைவது எளிதாகிவிடும்.

மனிதன் நடைமுறையில் தன்னையுணரும் முன் இப்படிப்பட்ட பல்வேறு பணிகளையும் செய்துதான் ஆகவேண்டும்; ஏனெனில் அப்படிப்பட்ட ஆன்மீக வாழ்வு மூலமாகத்தான் ஒருவர் தூய்மை அடையமுடியும். தூய்மையால் மட்டுமே பரமாத்மாவை உணர இயலும். இப்படி தன்னை ஈடுபடுத்திக்

கொள்ளாமல் பரமாத்மாவை என்னால் இன்னும் அறிய முடியவில்லை என்று அழுது துன்பபடுவதால் ஒரு பயனும் இல்லை.

ஆன்ம வாழ்வின் தூய்மையை அனுபவியாமல் உலக வாழ்வில் மூழ்கியுள்ள ஒருவரால் ஆன்மீக ஈடுபாட்டின் மதிப்பைப் பாராட்ட முடியாது. நான் அதை அனுபவித்துப் பாராட்டிய பின்பே ஆன்மீகத்தில் முயல்வேன் என்று சிலர் சொல்லக்கூடும்; இது நீந்தி பழகிய பின்பே நீரில் இறங்குவேன் என்று சொல்வதைப் போன்றது. உடம்புடன் ஒரு மிதவையைக் கட்டிக்கொண்டு நீரில் இறங்கினால்தான் நீச்சல் பழக முடியும்; அதைப்போலவே மனதுடன் ஒரு மிதவையைச் சேர்ந்து ஆன்ம சாதனையில் பயமின்றி இறங்க வேண்டும். அதன் பின்புதான் ஆன்ம சாதனையின் அருமையை உங்களால் புரிந்து கொள்ள இயலும். ஆன்ம சாதனையின் இயல்பும் கட்டுப்பாடுகளும் அந்த வழியில் பயணம் செய்தவர்களுக்குத்தான் தெரியும். சத்ய, விவேகப் பாதைதான் பரமாத்மாவிடம் அழைத்துச் செல்லும் என்பதை அவர்கள் அறிவார்கள். அந்த வழியில் செல்லாதவர்கள் அல்லது அப்படி ஒன்று இருப்பதாகவே அறியாதவர்களால் அதைப்பற்றி தங்களுக்கோ பிறருக்கோ விளக்க முடியாது.

14. Medidate on God as Truth and Love

### இறைவனை சத்தியமாகவும் அன்பாகவும் தியானி

பரமாத்மா ஒன்றுதான் உண்மையானது. பரமாத்மாவே சத்யம். பரமாத்மாவே அன்பு. அவரை சத்தியமாக, அன்பாகக் கருதி அவற்றின்மீது தியானம் செய்யுங்கள். நீங்கள் எந்த உருவத்தைக் தியானித்தாலும் அவரை உணரமுடியும். அடியார் குழாமில் எப்போதும் இருங்கள். சத்சங்கத்தின் மூலம் விவேகமும் வைராக்கியமும் நிலைபெறும்; அதிகமாகும். இவைகள் ஆன்மபலம் அருளும்; அகத்தில் சாந்தி நிலவும். அதன்பின் உங்கள் மனம் பரமாத்மாவுடன் ஒன்றும்.

எதைச் செய்யினும் உங்கள் வலிமை, திறமை அனைத்தையும் பயன்படுத்துங்கள். சொல்லும், செயலும் சத்தியத்தின் அடிப்படையில் இருக்கட்டும். இம்முயற்சியில் முதலில் நீங்கள் இடரிவிழலாம். கஷ்டங்களையும், துன்பங்களையும், சந்திக்கலாம். ஆனால் இறுதியில் நீங்கள் வெற்றி பெற்றுத்தானாக வேண்டும்; வெற்றியும் ஆனந்தமும் கட்டாயம் கிட்டும். இங்கே, ‘சத்தியமேவ ஜெயதே’ ‘ நான்றிதம் ‘ ஆகிய உறுதி வாக்கியங்களை நான் நினைவு கூர்கிறேன். உங்கள் நடத்தை, வாழும் முறை மூலம் நீங்கள் சத்தியத்தையும் பரமாத்மாவையும் உணர முடியும்.

15. Eschew selfishness, conceit and pride

### அகங்காரம் அசாந்தியாகிறது

சுயநலமிக்க பழக்கங்களை, மனப்பான்மைகளை எல்லையில்லாமல் மனிதன் படைக்கிறான், வளர்க்கிறான்; அதனால் திருப்தியின்மை அவனிடம் பெருமளவில் காணப்படுகிறது. ஆற்றலையும், அதிகாரத்தையும் குவித்து

வைக்கும் மனப்பான்மை, மேலாதிக்கப் போக்கு, ஒரு போதும் நிலையற்ற முழுமையடையாத பொருட்களின் மீது வைக்கும் பேராசை முதலியவற்றிலிருந்தும் அந்த அதிருப்தி எழுகிறது. மனிதன் மன நிறைவு அடையும் நிலையை அவைகள் ஒருபோதும் அளிப்பதில்லை. எல்லாவற்றையும் உடையவர் சர்வேஸ்வரன். நான் சகலகலாவல்லவன் அல்லது எல்லா செல்வங்களையும் உடையவன், அல்லது அனைத்து அறிவுகளையும் பெற்றவன் அல்லது சகல சாத்திரங்களின் களஞ்சியம் என்று ஒருவர் தன்னைப் பற்றிப் பெருமிதம் கொள்ளலாம்; ஆனால் இவை அனைத்தையும் அவர் யாரிடமிருந்து பெற்றார்? அந்த மூலம் உள்ளபடியே மிகமிகப்பெரிதாக இருக்க வேண்டும். ஒருவருடைய உடமைகள் அனைத்தும் அவருடைய உழைப்பு, முயற்சி, ஆற்றலால் கிட்டியதுதான் என்று உரிமை கொண்டாடலாம். ஆனால் நிச்சயமாக அவற்றை வேறு யாரோதான் அவருக்கு ஏதோ ஒரு வகையில் அல்லது வடிவத்தில் வழங்குகிறார். இதை அவர் இல்லையென்று சொல்ல முடியாது. எல்லா அதிகாரமும் எல்லா ஆற்றலும் பிறக்கும் மூலஸ்தானம் சர்வேஸ்வரனே. இறைவனின் சகல வல்லமையை அசட்டை செய்வதும் ஒருவர் பெற்றுள்ள சிறு ஆற்றலைக் கூட தனது என்று மயங்குதலும் தான் உண்மையில் இறுமாப்பு, பெருமை, அகங்காரமாகும்.

ஒருவரிடம் உண்மையான ஆற்றல் இருக்குமாகில் அவர் எங்கே இருப்பினும் அவரிடம் சத்தியம், இரக்கம், அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, நன்றியுடைமை முதலிய சிறப்பியல்புகள் இருக்கும்; அகங்காரம் அற்றவராக அவர் இருப்பார்; அதற்கு அங்கே இடமே இருக்காது. மேற்படி இயல்புகளை அடிப்படையாகக் கொண்டுதான் அவரை இனம் காணமுடியும். எனவே இந்த இயல்புகளை வளர்த்துக் கொள்ள ஆவல் கொள்ளுங்கள்.

அகங்காரத்தில் ஆன்ம ஜோதி மங்குகிறது. எனவே அகங்காரம் அழிக்கப்படும்போது எல்லாத் தொல்லைகளுக்கும் ஒரு முடிவு ஏற்படுகிறது. எல்லா சஞ்சலங்களும் மறைகின்றன; ஆனந்தம் அடையப்படுகிறது. சூரியன் பனி மூட்டத்தால் மங்குவது போல அகங்கார உணர்வு நிரந்தர ஆனந்தத்தை மறைக்கிறது. விழிகள் திறந்திருப்பினும் ஒரு துண்டுத்துணி அல்லது அட்டையால் தெளிவாகவும் பயனுள்ள வகையிலும் செயல்படா வண்ணம் தடுத்துவிடலாம். அதைப்போலவே சுயநலத்திரை இறைக்காட்சியை மறைக்கிறது. சொல்லப்போனால், வேறு எதையும்விட வெகு அருகில் இருப்பவர் இறைவனே.

16. Avoid argumentation and exhibition of scholarship

### பட்டங்களை விளம்பரப்படுத்துவதையும், தர்க்க வாதத்தையும் தவிர்

பல சாதகர்களும், சாதுக்களும் சந்யாசிகளும் துறவிகளும் நான் எனும் பற்றுதல் காரணமாக பல்லாண்டுகள் போராடித் தியாகம் செய்து தாங்கள் பெற்ற மேன்மைகளனைத்தையும் இழந்து விடுகின்றனர். இறையுணர்வால் ஏற்படுவது ஆனந்தம். அந்த ஆனந்தம் இல்லாத ஆற்றல், அஸ்திவாரமில்லாத சுவர் போன்றது. வெறும் பாண்டித்யத்தால் ஒரு பயனும் இல்லை; வேதங்கள், உப-நிடதங்கள், சாத்திரங்கள் முதலியவை அன்றாட வாழ்வில் பின்பற்றுவதற்குரிய

கோட்பாடுகளாகும். சொற்செல்வம் எப்படிப்பட்டதாக இருப்பினும், மேதாவித்தனம் எப்படிப்பட்டதாக இருப்பினும் நடைமுறைப்படுத்தாவிடின் அவை அனைத்தும் முழுக்க முழுக்க வீணானவையே. வேதங்கள், உபநிடதங்கள். சாத்திரங்களின் போதனைகளை நடைமுறை வாழ்வில் பின்பற்ற வேண்டுமெனில் ஒருவர், 'எனக்குத் தெரியும்' எனும் உணர்வைச் சுட்டெரித்தாக வேண்டும். உண்மையான சாரத்தை நன்றாக ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும். அப்போது ஆனந்தம் தவறாமல் கட்டாயம் கிட்டிவிடும்.

பஞ்சாங்கத்தில் பத்து யூனிட் மழை பொழியும் எனப் போட்டிருக்கலாம். ஆனால் அந்தப் பஞ்சாங்கத்தைப் பத்தாக மடித்துப் பிழிந்தாலும் அதிலிருந்து ஒரு சொட்டு மழை நீரைக்கூட எடுக்கமுடியாது. மழையைப்பற்றிய தகவலையும் அளவையும் குறிக்கத்தான் பஞ்சாங்கமே ஒழிய அதுவே மழையாக ஆகிவிடாது. மழை, மேலே உள்ள மேகங்களில் உள்ளது. அதைப்பொலவே சாத்திரங்களும் கோட்பாடுகள், விருதுவாக்கியங்கள், நீதிகள், நடைமுறைகள், கடமைகள் பற்றிய தகவல்களை மட்டுமே தரமுடியும். சாந்தியும் வீடுபேறும் அடைவதற்குரிய வழிகளைப் போதிப்பதும் நல்வழிப்படுத்துவதும்தான் வேதங்கள், உபநிடதங்களின் சிறப்பியல்பு. ஆனால் ஆனந்தத்தின் சாரத்தை அந்நூல்களைப் பிழிந்து சேகரிக்க இயலாது; சாரம் அவற்றில் திணிக்கப்படவில்லை. அவற்றில் விளக்கப்பட்டுள்ள பாதையை, வழிகாட்டுதலை குறிக்கோளை ஒருவர் கண்டுபிடித்தாக வேண்டும்; அந்த வழியில் நடக்க வேண்டும். வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும். குறிக்கோளை அடைய வேண்டும். இருப்பினும் 'எனக்கு எல்லாம் தெரியும்' எனும் இறுமாப்பை உருவாக்கும் 'நான்' எனும் உணர்வு இருக்குமாகில் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாகிவிடும்; முக்தியின் ரகசியம் இந்த ஆபத்தை உணர்வதில்தான் இருக்கிறது; இந்த அபாயம் தவிர்க்கப்படாவிடில் மறுபிறப்பும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

மேலே கூறியவற்றில் நீங்கள் விழிப்புடன் இருந்து, ஆன்மீக சாதனையில் மூழ்குவீராகின் உலகும் அதன் கவலைகளும் உங்களைப் பாதிக்காது. இந்த உண்மையிலிருந்து நீங்கள் வெகுதூரம் விலகும்போதுதான் நீங்கள் துயருறுகிறீர்கள். வலியை உணர்கிறீர்கள்; வேதனையை அனுபவிக்கிறீர்கள். சந்தையை விட்டுத்தள்ளி இருக்கும் ஒருவனுக்குத் தெளிவில்லாத பெருங்கூச்சலே காதில் விழும். ஆனால் அதன் அருகே சென்று அதற்குள் நடந்தால் தெளிவாகத் தனித்தனியாகப் பேரம் பேசுவது புரியும். அதைப்போலவே பரமாத்மாவை அறியும்வரை உலகின் கூச்சல் உங்கள்மீது மேலாதிக்கம் செய்து ஸ்தம்பிக்க வைத்துவிடுகிறது; ஆனால் முயன்று, நீங்கள் ஆன்மீக சாம்ராஜ்யத்தின் உட்பகுதிக்குச் சென்றுவிட்டால் ஒவ்வொன்றும் தெளிவாகி விடுகிறது. மெய்யறிவு உங்களிடம் விழிப்படைகிறது. அதுவரை நீங்கள் அர்த்தமற்ற வாதங்களிலும் தகராறுகளிலும், விளம்பரத்திலும், பகட்டிலும் சிக்குண்டு கிடப்பீர்கள்.

**17. Avoid doubters and ignorant people**

## அறிவிலிகளையும் சந்தேகபுத்தியுடையவர்களையும் தவிர்

குறிக்கோளை நோக்கி பக்தி மார்க்கத்தில் செல்லும் சாதகர்கள் பின்வரும் சிறப்பியல்புகள் பெற முயல வேண்டும். உலகின் தவறுகள், கொடுமைகள், வேதனைகளிலிருந்து அவர் விலகியிருக்க வேண்டும். சத்தியம், ஒழுக்கம், அன்பு, அமைதி முதலியவற்றைப் பின்பற்ற வேண்டும். இதுதான் உண்மையான பக்திமார்க்கம். இறைவனுடன் ஐக்கியமாக விரும்புபவர்களும், உலக நன்மையை நாடுபவர்களும் போற்றுதல், தூற்றுதல் - வளம், வறுமை, இன்பம், துன்பம் முதலியவற்றைக் தகுதியற்றவையென்று தள்ளிவிட வேண்டும். உங்களுக்குள்ளேயே இருக்கும் ஆத்மாவின் மீது சீரான, உறுதியான நம்பிக்கை வைக்க வேண்டும்; ஆன்மீக மேன்மை பெற தங்களையே அர்ப்பணிக்க வேண்டும். யாருமே மகாபுருஷர், அவதார புருஷர் கூட ஏளனம், அவதூறுகளிலிருந்து தப்பிக்க முடியாது. ஆனால் பயமுறுத்தலுக்கு அவர்கள் அடிபணியக்கூடாது. மகாபுருஷர்கள், அவதாரர்களைக் கிண்டல் செய்வோரும் அவதூறுகளைப் பரப்புவோரும் தாங்கமுடியாத இன்னல்களுக்கு ஆளாகித் தத்தளித்த பின்பே பாராட்ட ஆரம்பிப்பர். மஹாபுருஷர், அவதாரர்களின் உண்மையான இயல்பை உணர ஆரம்பிப்பர். தோல்விக்குக் காரணம் அறியாமையால் எழும் பலவீனமே, எனவே ஊசாலாடுவோர், அறியாமையில் உழல்வோரிடமிருந்து சாதகர்கள் விலகி நிற்க வேண்டும். அவர்களின் நம்பிக்கைகளையோ அவர்களது வாதங்களையோ எதிர்க்காமல், வாதிடாமல் புனித நூல்களிலும் இறைவனது அடியார் குழாமிலும் ஆழ்ந்து விடவேண்டும். அதன்பின் ஏராளமான ஆத்ம உணர்வு அனுபவத்துடன், அந்த உண்மையை உணர்ந்ததால் பெற்ற ஊக்கத்துடன் எப்படிப்பட்ட நபருடனும் பயமில்லாமல் பழகலாம், தான் கண்டறிந்த சத்தியத்தை அவர்களுடைய மனதில் புகுத்தவும் செய்யலாம்.

18. Develop devotion and faith

## பக்தியையும் நம்பிக்கையையும் வளர்

நற்செயல்களை நாடுவோர், ஆன்மாவை உணரும் வழியில் நடப்போர் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளனர். 1) மேற்படி வழியில் நடந்தால் இடர்ப்பாடுகள், இழப்புகள், இன்னல்களுக்கு ஆளாகி விடுவோம் என நினைத்து பயப்படுபவர்கள் கடை நிலையைச் (அதமம்) சேர்ந்தவர்கள், 2) மேற்படி முயற்சியில் குறுக்கிடும் தடைகள், ஏமாற்றங்கள் முதலியவற்றால் மனம் தளர்ந்து, ஏமாற்றமுற்று முயற்சியைத் தொடராமல் இடையில் விடுபவர்கள் (மத்திமம்) இடை நிலையைச் சேர்ந்தவர்கள் 3) பாதை எப்படிப்பட்டதாக இருப்பினும் விடாமுயற்சியுடன் அமைதியுடன் ஊக்கத்துடன் பயணத்தை நிறைவு செய்பவர்கள் முதல் நிலையைச் (உத்தமம்) சேர்ந்தவர்கள். இந்த உறுதியும் நம்பிக்கையும் விடாமுயற்சியும் பக்தனின் சிறப்பியல்புகளாகும். மாய உலகின்மீது வைத்த பற்றினால் மயக்கமுற்று தற்காலிக இன்பத்தால் கவரப்பட்டு

நிலையான, முழுமையான மகிழ்ச்சியை அடைவதற்குரிய முயற்சியினை விட்டு விடாதீர்கள். ஆன்மீகக் கடமைகளை முழு ஈடுபாட்டுடன் தொடர்ந்து ஆற்றுங்கள்.

விடாமுயற்சியும், நம்பிக்கையுமில்லாமல் பரமாத்மாவை அறிய முடியாது. ப்ரேமையின் மூலமே சிரத்தை வருகிறது. சிரத்தையின் மூலம் ஞானம் வருகிறது. ஞானத்தின் மூலம் பரபக்தி வருகிறது. பரபக்தி மூலமே பரமாத்மா அடையப்படும்.

19. Cultivate love through two methods

**இரு முறைகளில் அன்பை (பிரேமையை) வளர்க்கலாம்.**

அப்படியானல் பிரேமையை வளர்த்துக் கொள்வது எப்படி? அதற்கு இரு வழிகள் உள்ளன; 1) எப்போதும் பிறரது குற்றங்களை - அவை எத்தனை பெரியவையாக இருப்பினும் அவற்றை சிறிதும் பொருட்படுத்தாமல் அசட்டை செய்துவிடவேண்டும். உங்கள் குற்றங்கள் - அவை எத்தனை சிறியனவாக, அசட்டை செய்யக்கூடியவையாக இருப்பினும் அவற்றைப் பெரிதாகக் கருதிக் கவலைப்பட்டு வருந்த வேண்டும். இந்த வழிகளால் பெரிய குற்றங்கள், குறைகளை நீங்கள் தவிர்க்கிறீர்கள்; சகோதரத்துவமும், சகிப்புத்தன்மையும் உங்களிடம் வளர்கிறது 2) நீங்களாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து எதைச் செய்தாலும் நீக்கமற நிறைந்த இறைவன் அதிலும் இருக்கிறார் என எண்ணிச் செய்யுங்கள். இறைவன் பார்க்கிறார்; கேட்கிறார்; எல்லாவற்றையும் அறிகிறார். நீங்கள் எதைப் பேசினாலும் ஒவ்வொரு சொல்லையும் இறைவன் கேட்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; பொய்யையும், மெய்யையும் பகுத்தறிந்து மெய்யையே பேசுங்கள்; எதைச் செய்தாலும் - நல்லது, கெட்டதைப் பிரித்து - நல்லதையே செய்யுங்கள். எல்லாம் வல்ல இறைவனின் நினைவு, விழிப்புணர்வு உங்களது ஒவ்வொரு நொடியிலும் இருக்கட்டும். இந்த உடல் ஆன்மாவின் ஆலயம். அந்த ஆலயத்தில் எது நேரினும் அது அந்த ஆன்மாவைச் சாரும். அதைபோலவே இவ்வுலகு இறைவனின் ஆலயமாகும்; எனவே அதில் எது நல்லது. கெட்டது நேரினும் அது இறைவனைச் சாரும். ஆன்மா, உடல் குறித்து நீங்கள் அறிந்த உண்மையிலிருந்து, அறியாத உண்மையான இறைவனையும் உலகையும் அறிந்து கொள்ளுங்கள். கீழ்காணும் மூன்று முக்கியமான கருவிகளை உடைய ஒவ்வொருவராலும் ஆத்மா பரமாத்மாவின் தொடர்பையும் இரண்டுக்குமுள்ள உறவையும் உணர இயலும். 1) வெறுப்பு விருப்பினால் நிலைகுலையா மனம் 2) பொய்மை கலவா பேச்சு 3) பிறரைத் துன்புறுத்தாத உடல்.

இன்பமும் அமைதியும் வெளிப்பொருள்களில் இல்லை; அவை உங்கள் அகத்தில் உள்ளது. ஆனால் மக்கள் அவர்களது முட்டாள்தனத்தால் அவைகளைப் புற உலகில் (இன்றைக்கோ, நாளைக்கோ அவை உலகைவிட்டு நீங்கியாக வேண்டும்) தேடுகிறார்கள். எனவே விரைவில் விழித்தெழுங்கள். ஒவ்வொன்றிலுமுள்ள சாரத்தை நிலையான சத்தியத்தைத் தெரிந்து கொள்ள முயலுங்கள்; அன்பை அனுபவிக்க முயலுங்கள்; அன்பே பரமாத்மா. ஒவ்வொரு திருப்புமுனையும் ஆய்வுக்குரியது; ஆய்ந்து அதிலுள்ள உண்மையை

ஏற்றுகொண்டு, மற்றவற்றை ஒதுக்கிவிடுங்கள். உலக ஆசைகள் இருக்கும்வரை ஒருவன் துன்பத்திலிருந்து தப்ப முடியாது.

## விக்ரக வழிபாடு

**20. See the Macrocosm in the microcosm**

### அணுவில் அண்டத்தை பார்த்தல்

விக்ரக வழிபாட்டைப் பலர் சாடுகிறார்கள்; ஆனால் உண்மையில் அணுவில் அண்டத்தைப் பார்க்கும் திறனை மனிதனுக்கு அளிப்பதற்குரிய அடிப்படை அதில்தான் இருக்கிறது. விக்ரக வழிபாடு மனிதனின் கற்பனைத் திறனைச் சார்ந்ததல்ல. நேராக அனுபவித்தால்தான் அதன் அருமை தெரியும். இறைவனின் விராட் சொரூபத்தில் எது காணப்படுகிறதோ, அது அப்படியே சிறிதும் குறையாமல், கலப்படமில்லாமல் விக்ரகத்தில் காணப்படுகிறது. கவிதையில் உவமைகள், உருவகங்கள் செய்யும் பணியை விக்ரகங்கள் செய்கின்றன. அவற்றைப் பெரிதாக்குவதால் உதாரணமாக்குவதால் உண்மைகள் தெளிவாகின்றன.

பொருள்களின் வடிவிலிருந்து இன்பம் மனிதனுக்கு வருவதில்லை. ஆனால் அவற்றுடன் கொள்ளும் தொடர்பிலிருந்து வருகிறது. பெற்ற குழந்தையால்தான் தாய்க்கு மகிழ்ச்சி; மற்ற குழந்தையால் அல்ல. அதைப்போல ஒவ்வொருவருக்கும் எல்லாப்பொருள்களுடனும், அப்படிப்பட்ட மகிழ்ச்சி ஏற்படவேண்டும்; பிரபஞ்சத்திலுள்ள ஒன்றுகூட பாக்கியில்லாமல் எல்லாப் பொருளுடனும் ஒருவர் அப்படிப்பட்ட உறவை ஈஸ்வரப்ரேமையை ஏற்படுத்திக் கொண்டால்… ஆஹா! அது எப்படிப்பட்ட அருமையான இன்ப அனுபவமாக இருக்கும்; அந்த அருமையை உணர்ந்தவர்களால் மட்டுமே அதைப் புரிந்து கொள்ள இயலும்.

## கற்றல்

21.Listen, Contemplate and sing God's Name

### கேட்டல்(ஸ்ரவணம்), ஆழ்நிலை ஆய்வு, கீர்த்தனம்

வேதங்களும், புராணங்களும் கற்பதற்கும், கேட்பதற்குமுரிய தகுதி உடையவைகள். இறைநாமம் செவியில் விழவேண்டும். ஓதப்படவும் வேண்டும். சில நோய்களுக்கு மருந்தை வெளியே தடவ வேண்டும் என்கிறார்கள்; சிலவற்றிற்கு உள்ளே உட்கொள்ளவேண்டும் என்கிறார்கள். ஆனால் இந்தப் பிரபஞ்ச நோயான பிறப்பு இறப்பு சுழற்சிக்கு (பவரோகம்) அகம், புறம் இரண்டிற்கும் பயன்படுத்தும் வகையில் ஸ்ரவணம், கீர்த்தனம் முதலிய மருந்துகள் கூறப்பட்டிருக்கின்றன, இறை நாமத்தைச் சொல்லவும் வேண்டும். கேட்கவும் வேண்டும். அப்போதுதான் குருஅருள், திருஅருள், இறையுடையார் அருளை சாதகர் ஒருவர் பெற இயலும். ஆனால் அந்தகரணத்தின் ( தனது சுய அறிவின் அருள்) அருளைப் பெறாவிடின் இந்த அருள் அனைத்தாலும் ஒரு பயனும் இல்லை. இந்த அருள் இல்லையேல் அவன் நரகில் விழுவான்;

மற்றவையெல்லாம் அவை எப்படிப்பட்டவையாயிருப்பினும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

இறையருள் எளிதில் அடையப்படுவதில்லை. அகங்காரம் ( நானெனும் உணர்வு) "செய்பவன் நானே" எனச் சொல்ல வைக்கிறது; அதை இதயத்திலிருந்து வேருடன் பறித்துவிட வேண்டும்.. கற்றவன், கல்லாதவன் யாராக இருப்பினும் இறைவனை அறிந்து கொள்வதற்கு அதீதமான உந்துதல் அவனிடம் இருக்க வேண்டும். தனது குழந்தைகள் அனைவரிடமும் இறைவன் சரிசமமான அன்பு செலுத்துகிறார்; ஏனெனில் ஒளி அளிப்பதுதான் சுடரின் இயல்பு. அந்த ஒளியைப் பயன்படுத்தி சிலர் (அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பினும்) நல்ல நூல்களைப் படிக்கின்றனர். மற்றவர் அவரவர்க்குரிய அன்றாட அலுவல்களைப் புரிகின்றனர். அதைப்போலவே இறை நாமத்தை உச்சரித்த வண்ணம் ஒருவர் இறைவனை உணர்வதில் முன்னேறலாம்; சிலர் தீய காரியங்களைக்கூட செய்யக்கூடும்; ஒளியைப் பயன்படுத்தும் முறையைப் பொருத்தே அனைத்தும் இருக்கும். ஆனால் இறை நாமம் எப்போதும் எங்கும் மாசுபடாமல் இருக்கும்.